விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 059 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 04 திங்கட்கிழமை (16.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

புதிய பயங்கரவாதச் சட்டத்தில்

## நிறைவேற்றதிகாரத்துக்கு அதி உச்ச வரப் பிரசாதங்கள்



### விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் நடைபெற்ற போது அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத ஒழிப்பு சட்டத்தை விட, நிறைவேற்றதிகாரத்துக்கு அதி உச்ச அதிகாரங்கள் 15ஆம் பக்கம் பார்க்க

புதிய பயங்கரவாதச் சட்டத்தில்

## மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குங்கள்

### ஐ.நா நிபுணர்கள் எடுத்துரைப்பு

(ஜெனிவா)

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது அரசைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டிருப்பதைவிட மக்களின் பாதுகாப்புக்கேமுன்னுரிமை அளிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

02ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி விவகாரத்தை மூடிமறைக்க முயற்சி

## சோமரத்ன பரபரப்புக் குற்றச்சாட்டு



(கொழும்பு)

செம்மணிப் படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளாமல் காணாமல் போன சிலரின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கி குறித்த விடயத்தை கைகழுவ முயற்சிப்பதாக சோமரத்ன ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

அக்குரோடைப் பகுதியில் சட்டத்தரணி ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப் பகிஷ்கரிப்பில் 15ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் விபத்து; ஆணொருவர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த 60 வயதான செல்லையா விஜேந்திரன் 16ஆம் பக்கம் பார்க்க

## வாடகைக் காரினை அடகு வைத்த ஆசாமி


### பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

நீர்கொழும்பில் கார் ஒன்றை வாடகைக்குப் பெற்ற நபர் யாழ்ப்பாணத்தில் அதை அடகு வைத்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நீர்கொழும்பில் வாகனங்களை வாடகைக்கு விடும் 15ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி



04ஆம் பக்கம் பார்க்க

## திருக்கேதீஸ்வர நாதனை தரிசித்த பிரதமர் ஹரிணி



15ஆம் பக்கம் பார்க்க

## பிரிவினைவாதம் தலைதூக்க முன்னர் மாகாணத் தேர்தலை நடத்துங்கள்

### எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக்க

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் போராட்டங்கள், பிரிவினைவாதக் கோரிக்கைகள் தலைதூக்குவதனையே சுட்டி நிற்கின்றன.

எனவே உடனடியாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

15ஆம் பக்கம் பார்க்க



## ஜிந்துப்பிட்டி சூட்டுச் சம்பவத்தில் மன்னார் இளைஞன் பலி

(ஜிந்துப்பிட்டி)

கொழும்பு ஜிந்துப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு (14) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மன்னார் முசலி 15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவு நாளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மண்ணில் 28.12.1969

விண்ணில் 26.02.2025

கடந்த (26.02.2025) அன்று இறைபதமடைந்த எமது
அன்பிற்கினிய குடும்ப குலவிளக்கு

## அமரர் சரஸ்வதி தவராசசிங்கம்

**(ஆசிரியர் – யா/எழுதுமட்டுவாழ் கணேஷா வித்தியாலயம்)**

கல்விப் புலத்தில் கால் பதித்த ஆளுமையே
மாணவர் ஒழுக்கத்திற்கு கைகொடுத்த ஆசானே
நவனியூர் அம்மனின் மறு அவதாரமானீர்
அம்பாள் துணைகொண்டு என்றும் வலம் வந்தீர்கள்
அவசர முடிவால் மீளாத் துயில் கொண்டீர்கள்
தேற முடியாத் துயரால் துவண்டோம்
ஓராண்டு ஓடி மறைந்தாலும் மறந்திட முடியா......
நினைவுகள் சுமந்தோம்!

திடீரென எம்மை விட்டுப் பிரிந்த அன்னாரின் ஓராண்டு நினைவு நாளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (16.02.2026) திங்கட்கிழமை அவரது சகோதரனான எமது இல்லத்தில் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

இத்தாவில், பளை.
077 956 7419

தகவல் : கி.சொர்க்கலிங்கம்
சகோதரன் குடும்பம்.

(C-5009)

## மக்களின்...

இது குறித்து அவர்கள் மேலும் கருத்துரைத்துள்ளதாவது,

பயங்கரவாதம் என்பது கொலை, கடத்தல் அல்லது கடுமையான உடல் காயம் விளைவிப்பதாக மட்டுமே இருக்க வேண்டும்.

ஆனால் புதிய சட்டத்தில் சாதாரண காயம், சொத்துச் சேதம் மற்றும் நாட்டின் இறையாண்மையை மீறுதல் போன்ற தெளிவற்ற விடயங்களும் பயங்கர வாதமாக வகைப்படுத்தப்படுகிறது.

இது சிவில் சமூக செயற்பாட்டாளர்களை குறிவைக்க பயன்படுத்தப்படலாம். புதிய யோசனையின் கீழ் ஒரு நபர் நீதிமன்ற விசாரணையின்றி 2 ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப்பட வாய்ப்புள்ளது.


தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை விடுவிக்கும் அல்லது தடுத்து வைத்தலின் சட்டபூர்வ தன்மையை பரிசீலிக்கும் நீதிவான்களின் அதிகாரம் இந்த சட்டத்தின் மூலம் பறிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கும் உத்தரவைப் பாதுகாப்பு அமைச்சருக்குப் பதிலாக பாதுகாப்புச் செயலாளர் பிறப்பிக்க முடியும், இது பொறுப்புக்கூறலை குறைப்பதாக அமையும். பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள கைது செய்யும் அதிகாரம் இராணுவம் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இது நாட்டில் ஒரு நிரந்தர இராணுவ அவசரகால நிலையை உருவாக்கும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் அல்லது மனித உரிமை மீறல்கள் குறித்த செய்திகளை வெளியிடுவது இரகசியத் தகவல்களை வெளியிடுதல் என்ற பெயரில் குற்றமாக்கப்படலாம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவரும் தற்போதைய பழைய மாணவர் சங்கப் பொருளாளருமான திரு.நிரோஷிகன் அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் குமாரசாமி சண்முகநாதன்

**(ஓய்வு நிலை மேல் நீதிமன்றப் பதிவாளர்)**

அவர்கள் நேற்று (15.02.2026) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.08.1945
மறைவு 15.02.2026

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் (தாய்ச்) சங்கமும்
அனைத்து பழைய மாணவர் சங்கங்களும்
(Colombo, Australia, UK, Canada)

(C-5006)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 11 - 1961



மறைவு 14 - 02 - 2026

## சத்தியசிவசொரூபினி சுந்தரமூர்த்தி

**(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் – யாழ். மாநகரசபை)**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் 23/25, கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடை என்னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியசிவசொரூபினி சுந்தரமூர்த்தி (முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை) அவர்கள் கடந்த (14.02.2026) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (முன்னாள் யாழ். மாநகர முதல்வர்) - மதியாபரணம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கச்சியம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நவரத்தினம் சுந்தரமூர்த்தி (முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை) அவர்களின் அன்பு மனைவியும் சாய்விகாசன் (விகாசன்), சாய்விகாசினி (விகாசினி - முதலாம் வருட கலைப்பீட மாணவி, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் சத்தியலட்சுமி, இலட்சுமிகாந்தன், ஸ்ரீனிவாசன், குணாளன், சாவித்திரி, காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் சிவகுமாரன், சிவநேசன் (தம்பொன்னன்), சிவானந்தன் (சங்கர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரலிங்கம், அங்கயற்கரசி, வேலும்மயிலும், அன்னலட்சுமி மற்றும், இந்திரா, சிவநேசராணி, சத்தியா, சுத்தானந்தன், தமயந்தி, யசோ, சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கப்பிளவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

23/25, கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தோடை, சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர்
076 297 8795, 077 931 4912

(6849)

# மரண அறிவித்தல்

## நடராசா பரமேஸ்வரி [நல்லம்மா]



தோற்றம் 27.10.1945
மறைவு 15.02.2026

அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கிராம்புவிலை வசிப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, மீசாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (ஓய்வுநிலை மின்னியலாளர் - சாவகச்சேரி நகரசபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் கணேசமூர்த்தி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராணி, ஜெயக்குமார்(தபாலகம் - சாவகச்சேரி), ஜெயலலிதா, பாலகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), லிபன்(இலங்கை போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர் - பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சந்திரராசா(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் - தென்மராட்சி கல்வி வலயம்) மற்றும் மங்களேஸ்வரி(ஆசிரியர் - யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), பாலசுப்பிரமணியம், திருவாணி(ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), மயூரதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யதீசன்(நீதிமன்ற எழுதுனர் - நீதிவான் நீதிமன்றம், மட்டக்களப்பு), யபோசன்(ஆசிரியர் - சிலாபம் வடிவாம்பிகை இந்துக்கல்லூரி), சுஹேசினி(பொறியியலாளர் - கொழும்பு), காருசன்(ஆசிரிய பயிலுனர் - தாழங்குடா கல்வியற் கல்லூரி, மட்டக்களப்பு), தர்சனா, திருசிகன், கீர்த்தனன், கிரிஜா(ஆசிரியர் - மாறை/மின்ஹாத் தேசிய பாடசாலை, மாத்தறை), திவ்விஜா(ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), கிஷானி, அருண்யன், அருணியா, ஹேசாந்த், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை அல்லாரையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் எறியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

தகவல் : குடும்பத்தினர்
077 365 6907

(C-5005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

22 - 07 - 1948



மறைவு

14 - 02 - 2026

# சிவனேசன் கலைவாணி

புங்குடுதீவு-10 கிழக்கு கண்ணகைபுரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அமரர் உயர்திருமதி சிவனேசன் கலைவாணி அவர்கள் 14.02.2026 சனிக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேல்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவனேசனின் ஆருயிர் மனைவியும் குகானந்தவேல் மாஸ்டர், கலைமணி வேல்சாமி, யாழ்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலரூபி (ரூபி), கஜேந்திரநாத் (கஜன்), ஆகியோரின் அருமைத்தாயாரும், பரிமளாதேவி, ஜெகநாதன், சிவமலர் ஆகியோரின் மச்சாளும் யனுஷா, ஜனனி, விபுலானந்தி ஆகியோரின் பெரியம்மாவும் சஞ்சீவ், சரண்சீவ், சைதிகா, பிரியா, பாமினி ஆகியோரின் பெரிய அத்தையும் ஜெகன், அஜந்தா ஆகியோரின் அன்பு மாமியும் சிதம்பரநாதன், குருபரநாதன், லீலாம்பிகை, புவனேஸ்வரி (கமலா), குமரையா ஆகியோரின் மைத்துனியும் சோகாமி, காந்தி, நந்தகுமாரி, கிருஸ்ணபிள்ளை, கந்தையா ஆகியோரின் சகலியும் கேசிகா, நிக்ஷிகா ஆகியோரின் பேத்தியும் பிரியா, உஷா, பபிதா, யாசோஸ்ரீ, கவிதா, கஜந்தினி ஆகியோரின் குஞ்சியம்மாவும் ரவீந்திரநாதன்-கருணாவதி, மன்மதராஜா-தனலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.02.2026 இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் காலை 10.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல.37, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
071 789 6164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டம்; பிரிவு 2 இற்குள் நுழைந்த கிராஸ்கொப்பர்ஸ் அணி




வடமாகாண கழகங்களுக்கிடையிலான மாபெரும் துடுப்பாட்டத் தொடரில் பிரிவு 3 இற்கான போட்டியில் வவுனியா யுனிவ்வைட் அணியை வீழ்த்தி யாழ்ப்பாணம் கிராஸ் கொப்பர்ஸ் அணி வெற்றி பெற்று பிரிவு 2 இற்குள் நுழைந்தது.

கடந்த சனிக்கிழமை வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வவுனியா யுனிவைட் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் கிராஸ்கொப்பர்ஸ் அணி மோதியிருந்தது.

நாணய சுழற்சியில் வென்ற யுனிவ்வைட் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிராஸ் கொப்பர்ஸ் அணி 49.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 257 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

கிராஸ்கொப்பர்ஸ் அணி சார்பில் அஜித் 78 ஓட்டங்களையும், வரலக்ஷன் 62 ஓட்டங்களையும், சர்மிலன் 36 ஓட்டங்களையும், ஜனந்தன் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றிருந்தனர். பந்து வீச்சில் யுனிவ்வைட் அணியிலிருந்து மதுசன் தலா 4 விக்கெட்டுக்களையும், பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் அதிகபட்சமாக வீழ்த்தியிருந்தனர்.

258 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யுனிவ்வைட் அணி 46.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதனால் 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிராஸ் கொப்பர்ஸ் அணி வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுனிவ்வைட் அணி சார்பில் ருசாந்தன் 94 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றிருந்ததுடன் பந்து வீச்சில் கிராஸ் கொப்பர்ஸ் அணியிலிருந்து ஜோவெல் ரொஷான் தலா 4 விக்கெட்டுக்களை அதிகபட்சமாக வீழ்த்தியிருந்தார்.

ஆட்டநாயகன் விருதினை கிராஸ் கொப்பர்ஸ் அணியின் ஜோவெல் ரொஷான் வென்றிருப்பதுடன் வடமாகாணத்தின் எட்டாவது அணியாக பிரிவு 2 இற்குள் கிராஸ் கொப்பர்ஸ் அணி இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. *(3-90)*

## செம்மணி...

இந்நிலையில் செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் தான் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்தின் ஊடாகவும், அதன் பின்னரும் பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவை குறித்து தற்போதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பில் சுயாதீன குழுவொன்றை நியமித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கைவிடுத்து, கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால் எழுதப்பட்ட கடிதம் மீண்டும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும் இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி.விஜேவிக்ரம கடந்த ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அதனையடுத்து இதுபற்றிய மேலதிக விபரங்களைக் கேட்டறியும் நோக்கில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷவை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், மீண்டும் இரண்டாம் கட்டமாக கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இச்சந்திப்பு தொடர்பான விபரங்களை தனது மனைவி ஊடாக எழுத்துமூலம் வெளிப்படுத்திய சோமரத்ன ராஜபக்ஷ, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினர் செம்மணிப்படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல்போனோரில் சிலரது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, அவ்விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, கைகழுவிவிடுவதற்கே முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதேவேளை இச் சந்திப்பின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான கடிதமொன்றும் சோமரத்ன ராஜபக்ஷவினால் காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

அக்கடிதத்தில் செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் தான் ஏற்கனவே அனுப்பி வைத்திருந்த கடிதத்தின் ஊடாகவும், அதன் பின்னரும் பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தியிருந்த போதிலும்,

அவை குறித்து தற்போது வரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இவ்விடயம் தொடர்பில் சுயாதீன குழுவொன்றை நியமித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் சோமரத்ன ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருப்பதாக அறியமுடிகிறது. *(க-7)*

# பருத்தித்துறை கலங்கரை விளக்கம் சுற்றுலாத் தலமாக மாற்ற ஆராய்வு

*(கரணவாய்)*

கடற்படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறை கலங்கரை விளக்கத்தை சுற்றுலாத் தலமாக மாற்றியமைப்பது தொடர்பில் வடமாகாண தொல்பொருள் திணைக்கள குழுவினர் கடந்த 11 ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டு கடற்படையினருடன் கலந்துரையாடியிருந்தனர்.

கலங்கரை விளக்கத்தின் உட்கட்டுமானத்தை புனரமைப்பு செய்வதற்கும் அதனைச் சூழ உள்ள கணிசமான பகுதியை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நகர சபைத் தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் பிராந்திய தொல்பொருள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

இதனைடிப்படையில் யாழ்/ கிளிநொச்சி மாவட்டங்களுக்கான தொல்பொருள் உதவிப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேரில் வருகை தந்து பார்வையிட்டிருந்தனர்.

குறித்த கடற்படை முகாம் பொறுப்பதிகாரியுடன் நேரடியாக இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## பாகிஸ்தானை...

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 27 ஆவது போட்டியில் இந்திய அணி அபார வெற்றியீட்டியுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் இஷான் கிஷான் அதிகபட்சமாக 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன்படி இந்திய அணி 61 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. *(க-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த் திருவிழா நேற்றைய தினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

# க.பொ.த சாதாரணதரப் பரீட்சை; அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)..........

**கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைகளை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இறுதி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.**

நாடு முழுவதும் 3,545 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பொலிஸார் மற்றும் முப்படைகளின் ஒத்துழைப்புடன் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் அவசர நிலைகள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்ளவும், போக்குவரத்து வசதிகள் குன்றிய பகுதிகளிலுள்ள மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளி காரணமாக தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட கட்டாய ஆவணங்களை இழந்த மாணவர்களுக்காக விசேட சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டையை இழந்த மாணவர்கள், கடவுச்சீட்டு அளவிலான இரண்டு புகைப்படங்களை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபரிடமும், தனியார் விண்ணப்பதாரிகள் கிராம சேவகரிடமும் அந்தப் புகைப்படங்களில் கையொப்பம் பெற்று சான்றுப்படுத்த வேண்டும்.

சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்து மூன்று மாதங்களுக்குள் அதன் பெறுபேறுகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் இதன்போது அறிவித்தார். (8)

## புதையல் தோண்டிய அறுவர் கைது

(கொழும்பு)

லுனுகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வனப் பகுதியில் புதையல் தோண்டிய ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அகழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## விசேட சுற்றிவளைப்பு 560 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 560 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (8)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(கரணவாய்)

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாரந்தம் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனை தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் சங்கானை கிழக்கு, வெல்வில் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக,

ஆழ்துளையிடும் கிணறு திருத்தம் மற்றும் கட்டட திருத்தச் செலவுகளுக்காக 150,000 ரூபா நிதியும்,

மருத்துவ உதவியாக விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சியை சேர்ந்த யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் முன்னாள் போராளி ஒருவருக்கு தொடை மூட்டு அறுவைச் சிகிச்சைக்காக 150,000 ரூபா நிதியும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் யா/ கம்பர்மலை வித்தியாலயம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் பாடசாலை, கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு 146000 ரூபா பெறுமதியில் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (8-60)

# ஊர்காவற்றுறை கோட்டை மேம்படுத்த நடவடிக்கை



(அராலி)

ஊர்காவற்றுறையின் வரலாற்றுச் சிறப்புமிக்க உருண்டி கோட்டை மற்றும் கடவுக்கரை பகுதிகளை மேம்படுத்துவது தொடர்பான முயற்சி சாதகமாகி உள்ளதாக வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சுற்றுலா துறையினர், ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், பயணிகளின் வசதிக்காக ஊர்காவற்றுறை கடவுக்கரை பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் மற்றும் சுத்தமான கழிவறைகள் அமைத்தல், உருண்டி கோட்டை பகுதியை மையமாகக் கொண்டு சுற்றுலா நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான முதற்கட்டப் பணிகளை ஆரம்பித்தல் போன்ற திட்டங்கள் முக்கிய அம்சமாக தீர்மானிக்கப்பட்டன.

இப்பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்கு பிரதேச சபை தமது முழுமையான ஒத்துழைப்பையும் சம்மதத்தையும் வழங்கியுள்ளது.

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ராகம பகுதியில் 271 கிலோகிராம் 835 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த கைது இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (8)

# காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து



ந்து புதியதாக நியமனம் பெறும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினர்.

இத்தகைய நியமனங்கள் ஊடாக மாவட்டத்தில் சமரச கலாசாரம் வலுப்பெற்று, சமூக ஒற்றுமையும் சட்ட ஒழுங்கும் மேம்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவை விரைந்து ஆரம்பியுங்கள்

## ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் நிறைந்துள்ள ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை அகற்றி விரைந்து நெற்கொள்வனவை ஆரம்பிப்பதுடன், வவுனியா வடக்கிலும் நெல் சந்தைப்படுத்தல் சபை விரைந்து நெற்கொள்வனவை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் களஞ்சிய சாலைகளில் நிறைந்துள்ள நெல்லை உரிய வகையில் அகற்றி விரைவாக விவசாயிகளிடமிருந்து நெல்சந்தைப்படுத்தல் சபையால் நெற்கொள்வனவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க இதன்போது பதிலளித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பங்கசு தொற்றுடன் 'கட்டைத் தூள்' உற்பத்தியாளருக்கு சிறை

(யாழ்ப்பாணம்)

யாழில் பங்கசு தொற்றுடைய "கட்டை தூளை" உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கு ஒரு மாத சிறை தண்டனையும் 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை குறித்த கட்டைத் தூளை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த கடை உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டு கடுமையான எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிகண்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகரான மதியானந்தகுரு நந்தகுமாரால் வியாபார நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை பங்கஸ் தொற்றுடன் கட்டைத் தூளை விற்பனைக்காக வைத்திருந்த கடை உரிமையாளருக்கும் குறித்த கட்டைத் தூளை உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கும் எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கானது நீதிமன்றில் விசாரணைக்கு எடுத் துக்கொண்ட போது. விற்பனையாளரும் உற்பத்தியாளரும் மன்றில் முன்னிலையாகிய நிலையில் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

அதனை அடுத்து விற்பனையாளரை கடுமையாக எச்சரித்த மன்று 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. தொடர்ந்து உற்பத்தியாளரை கடுமையாக எச்சரித்த மன்று உற்பத்தியாளருக்கு ஒரு மாத சிறை தண்டனை விதித்ததுடன் 20 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது. (8-33-60)

# இலங்கையில் அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் அதிகரிப்பு




2026 பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியில் அரசாங்கத்திற்கான மக்கள் அங்கீகாரம் 65% ஆகப் பதிவாகியுள்ளதாக, ஆசியாவின் அரச மற்றும் தனியார் துறைகள் தொடர்பான மூலோபாய பகுப்பாய்வு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் சுயா தீன நிறுவனமான Verité Research தெரிவித்துள்ளது.

அந் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் கெலப்பாணி யிலான "நாட்டின் மன நிலை" (Mood of the Nation) எனும் சமீபத்திய கருத்துக் கணிப்பு ஆய்வின் ஊடாகவே இத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நான்கு வருட கால கருத்துக் கணிப்பு வரலாற்றில், நாட்டின் நிலைமை குறித்த மக்களின் திருப்தி நிலையானது 50% ஐ விடவும் விஞ்சிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட்ட 62% எனும் மக்கள் அங்கீகார வீதத்துடன் ஒப்பிடுகை யில், இவ்வருடம் அப்பெறுமதி நிலையான மட்டத்தில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாங்கத்தின் மீதான அதிருப்தி வீதமானது 2025 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய கருத்துக் கணிப்பில் இருந் ததைப் போலவே குறைவாகவும் மாற்றமின்றியும் காணப்படுகிறது.

வெரிட்டே ரிசர்ச்சின் தகவலின்படி, இக்கருத்துக் கணிப்பின் நான்கு வருட வரலாற்றில் முதல் முறையாக, தற்போதைய பொருளாதார நிலைமைகள் "நன்று" அல்லது "மிகவும் நன்று" என மதிப்பிட்டவர்களின் எண்ணிக்கை, அதனை "மோசம்" என மதிப்பிட்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகரித்துள்ளது.

அத்துடன் பொருளாதாரக் கண்ணோட்டம் குறித்த கருத்துக்களும் மேம்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதாரம் "மேம் பட்டு வருகின்றது" எனக் கூறியவர்க ளின் எண்ணிக்கை ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த 55% இல் இருந்த போதிலும் தற்போதைய கருத்துக் கணிப்பில் 64% ஆக அதிகரித்துள்ளதாக வெரிட்டே ரிசர்ச் சுட்டிக்காட்டியுள்ளது. (3)

# மெய்வல்லுநர் போட்டிகள்


யா/வேலணை மத்திய கல்லூரி


உடுவில் மகளிர் கல்லூரி


மன்/புனித லூசியா மகா வித்தியாலயம்


வள்ளிபுனம் மகா வித்தியாலயம்


யா/கட்டைக்காடு றோ.த.க.பாடசாலை


பருத்தித்துறை புனிதநகர் தமிழ் மகா வித்தியாலயம்


பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்


யா/புற்றளை மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டத்தின் முன் அனைவரும் சமம் பிரிவினைவாதத்திற்கு இடமில்லை

## சிறுவர் மகளிர் விவகார அமைச்சர்

(வவுனியா)

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பிரிவினைவாதத்திற்கு இடமில்லை என சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 999 பெண் தலைமைத்துவ குடும்பங்களை கண்டறிந்துள்ளோம்.

கிட்டத்தட்ட 8 ஆயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு 2026 ஆம் ஆண்டு எமது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மகளிர் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பது பற்றியும் அவர்களது வாழ்வாதாரம், பாதுகாப்பு, பிள்ளைகளின் கல்வி, சிறுவர் பாதுகாப்பு, போதைப்பொருள் பாவனை, தொலைபேசி பாவனை பாதிப்பு குறித்தும் பாலியல் ரீதியான குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம்.

தற்போது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது. எல்லோருக்கும் பாகுபாடு இல்லாது நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எல்லாம் 100 வீதம் சரி என சொல்லவில்லை. இன்னும் காலம் இருக்கிறது. அதனை செய்வோம்.

பிரிவினைவாதத்திற்கு இடமளிக்க மாட்டோம். அனைவரும் ஒன்றுமையாக வாழ முடியும் எனத் தெரிவித்தார். (8-250)


# பொதுக்கூட்டம் (2026)

அளவெட்டி வடக்குத் தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உபயகாரர் பொதுச்சபை கூட்டமானது எதிர்வரும் 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

செயலாளர்,
சோ.அனுஷாந்தன்.

(6846)



# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of SHO Quarters Roof, Common Bathrooms , Doctors' Tea Lounge, SLAP Water Proofing Work | 1500.00 | 107,000.00 | 91 | 5.34 | C 8 & Above |
| 2. | Renovation of Quarters at Proposed Land for Inuvil Childrens Hospital | 1500.00 | 137,000.00 | 91 | 6.82 | C 8 & Above |
| 3. | Construction of Timber Floor at DSA Unit | 1500.00 | 12,000.00 | 91 | 0.58 | C 9 & Above |
| 4. | Canopy Roof at Surgical Clinic & Lift room roof | 1500.00 | 41,000.00 | 91 | 2.03 | C 9 & Above |
| 5. | Renovation of OPD1st Floor Surgical clinicside, Surgical clinic staff toilet & Roof repair | 1500.00 | 84,000.00 | 91 | 4.18 | C 8 & Above |
| 6. | Renovation of Blood Bank | 1500.00 | 208,000.00 | 91 | 10.37 | C 7 & Above |
| 7. | Renovation of Drainage and gate fixing at back side of New Renal Building | 1500.00 | 84,000.00 | 91 | 4.15 | C 8 & Above |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from **18.02.2026** up to **09.03.2026** during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on **10.03.2026**, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**16.02.2026**

(C-5003)


## உயிரிழந்த கோழிகள் விற்பனை;
# இரண்டு பேர் கைது

(கொழும்பு)

கோழியிறைச்சி உண்பவர்கள் இறைச்சியை கொள்வனவு செய்யும் போது அவதானமாக இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் உயிரிழந்த கோழிகளை விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்டிருந்த இரண்டு பேர் ஆனமடுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்களிடமிருந்த சுமார் 75 கிலோகிராம் இறைச்சி பொது சுகாதார பரிசோதகர்களால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த இக்கோழிகளை விலங்கு உணவிற்காகக் கொண்டு செல்வதாகக் கூறி, அவற்றை மனித நுகர்விற்காக விற்பனை செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## பொது இடங்களில் வெற்றிலை பாவனை;
# மூவருக்கு எதிராக நடவடிக்கை

(நெளுக்குளம்)

பொது போக்குவரத்தில் வெற்றிலை மென்று துப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை, பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஆகியோருடன் இணைந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலன் தலைமையில் பொது இடங்கள், பொது போக்கு வரத்தில் வெற்றிலை மென்று துப்புபவர்களை கட்டுப்படுத்தும் திடீர் சோதனை நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நடவடிக்கையின் போது பேருந்து, கார் , முச்சக்கர வண்டி மற்றும் ஏனைய வாகனங்களை வழி மறித்து பரிசோதனை மேற்கொண்டிருந்தனர். இதன்போது வெற்றிலை மென்ற மூன்று நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-299)



யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு சுப்பர் மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுக் காலை சங்கத் தலைவர் மு.சிவகுமார் தலைமையில் சுப்பர் மடத்தில் இடம்பெற்றது.

(படம்:தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவால்னி விஷம் வைத்துக் கொல்லப்பட்டமை உறுதி

### ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சி தகவல்



(மொஸ்கோ)

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி, தென் அமெரிக்காவின் அமேசன் காடுகளில் காணப்படும் ஒருவகை நச்சுத் தவளையிலிருந்து எடுக்கப்பட்ட கொடிய விஷத்தைப் பயன்படுத்தி கொல்லப்பட்டதாக பிரித்தானியா மற்றும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

நவால்னியின் உடலில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை இரண்டு ஆண்டுகளாக ஆய்வு செய்ததில், "எபிபாடிடைன்" என்ற நரம்பு மண்டலத்தைத் தாக்கும் விஷம் கண்டறியப்பட்டுள்ளது. இது மார்ஃபினை விட 200 மடங்கு சக்தி வாய்ந்தது.

இந்த விஷம் உடலில் நுழைந்த சில நிமிடங்களில் தசைப் பிடிப்பு, பக்கவாதம் மற்றும் சுவாசத் தடையை ஏற்படுத்தி மரணத்தை விளைவிக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தக் கொடிய விஷத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பும், நோக்கமும் ரஷ்ய அரசாங்கத்திற்கு மட்டுமே இருந்தது" எனக் கூறி, நவால்னியின் மரணத்திற்கு கிரெம்ளினே பொறுப்பு என நேரடித் தீர்மானம் வெளியிட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் தீவிர விமர்சகரான நவால்னி, 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி சைபீரியாவில் உள்ள சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

அப்போது அவர் "இயற்கை மரணம்" எய்தியதாக ரஷ்யா கூறிவந்தது. தற்போது வெளியாகியுள்ள இந்த ஆய்வு முடிவுகள், சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், ரஷ்யா இரசாயன ஆயுதத் தடைச் சட்டத்தை மீறியுள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் முறையிடவும் பிரித்தானியா தீர்மானித்துள்ளது.

தற்போது மியூனிக் மாநாட்டில் பங்கேற்றுள்ள நவால்னியின் மனைவி யுலியா நவால்னாயா கூறுகையில், "எனது கணவர் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார் என்பது எனக்கு ஆரம்பத்திலிருந்தே தெரியும், இப்போது அதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் கிடைத்துள்ளது" எனத் தெரிவித்தார். (3)

## 'மீண்டும் மன்னராட்சி வேண்டும்' நேபாள மக்கள் போராட்டம்



(காத்மண்டு)

நேபாளத்தில் அடுத்த மாதம் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு மீண்டும் மன்னராட்சி வேண்டும் என்று கூறி ஆயிரக்கணக்கானோர் தலைநகரில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

நேபாளத்தில் 240 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த மன்னராட்சி, கடந்த 2008 இல் முடிவுக்கு வந்தது. அங்கு மன்னராக இருந்த ஞானேந்திர ஷா, பொதுவாழ்வில் இருந்து விலகி ஒரு சாதாரண குடிமகன் போலவே வாழ்ந்து வருகிறார்.

நேபாளத்தில் கடந்த ஆண்டு வெடித்த இளைஞர் போராட்டத்தால், பிரதமர் கே.பி.சர்மா ஒலி பதவி விலகினார். உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்க்கி பிரதமராக பதவியேற்றார்.

இந்த அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி, அங்கு பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், மன்னர் ஞானேந்திர ஷா, கிழக்கு நேபாளத்தில் மூன்று மாத கால சுற்றுப்பயணத்தை முடித்து தலைநகர் காத்மண்டுவுக்கு நேற்று திரும்பினார். அவரை வரவேற்க திரிபுவன் சர்வதேச விமான நிலையம் முதல் அவரது இல்லம் வரை ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

அப்போது, "ராஜா திரும்பி வாருங்கள், நாட்டைக் காப்பாற்றுங்கள்:முடியாட்சியை மீட்டெடுங்கள்" என்று முழக்கமிட்டனர்.(3)

## ஆட்சி மாற்

## ஈரானுடன் எவ்

(ஒட்டாவா)

**ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படு நாட்டுடன் எவ்விதமான உறவுகளையும் பேணப் போவதில் அறிவித்துள்ளது.**

ஜேர்மனியில் நடைபெற்று வரும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய கனடா வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் இது தொடர்பான கனடாவின் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஈரானில் தற்போதைய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படும் வரை அந்நாட்டுடன் தூதரக உறவுகளை மீள ஆரம்பிக்கும் எண்ணம் கனடாவிடம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஈரான் அரசாங்கத்துடன் தொடர்புடைய ஏழு நபர்களுக்கு எதிராக மேலதிக தடைகளை கனடா விதித்துள்

## நாணயத்தாள்களால் த பரிசுப் பொருட்களு


### ஆபிரிக்க வங்கிகள்

(நைரோபி)

நைரோபி உட்பட பல ஆபிரிக்க நகரங்களில் காதலர் தினத்தன்று சிவப்பு ரோஜாக் களுக்குப் பதிலாக, நாணயத் தாள்களால் செய்யப்பட்ட "பணப் பூ கொத்துகள்" வழங்கு கலாசாரம் வேகமாகப் பர வருவதால் அதற்கு தல விதித்து எச்சரிக்கை விடுக்கப்ப

## 53 நாடுகளுக்கான இறக் வரியை முழுமையாக நீக்க தீ

### சீனா அறிவிப்பு



(பீஜிங்)

சீனாவுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ள 53 ஆபிரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும், எதிர்வரும் மே 1 ஆம் திகதி முதல் பூச்சிய வரி (Zero-tariff) சலுகையை வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், அந்த நாடு களினி ஏற்று அனை கும் முழுமை ளது.

என இராஜ கொன ட்டினி இந்தச் எனத் டுள்ள

இந் ஆபிரி சீனாவ் வர்த்த மேலு எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றம் ஏற்படும் வரை
# ...வ்வித உறவுகளும் இல்லை

...படும் வரை அந்த இராஜதந்திர ...ல்லை என கனடா

## கனடா திட்டவட்டம்



ளது.

ஈரானில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் குறித்து கனடா அதிக கவனம் செலுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கனடா ஏற்கனவே கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஈரானுடனான தனது இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துள்ளது.


இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஆதரிக்கும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஈரான் மீது தாக்குதல் நடத்த ஜனாதிபதி உத்தரவிடும் பட்சத்தில், பல வாரங்கள் நீடிக்கக்கூடிய இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் ஒரு கட்டமாக, இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பல் ஒன்றும் அந்தப் பிராந்தியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அமெரிக்காவின் இத்தகைய இராணுவத் தாக்குதல்களுக்கு கனடா தனது ஆதரவை வழங்குமா என்பது குறித்து அமைச்சர் அனிதா ஆனந்த் நேரடியான பதில்கள் எதனையும் வழங்கவில்லை. (3)

---

# ...தயாரிக்கப்படும் ...நுக்குத் தடை
## ...எச்சரிக்கை



... பூங் ...ங்கும் ... பரவி ... தடை ...க்கப்பட்டு

ள்ளது.

சமூக வலைதளங்கள் மூலம் பிரபலமடைந்த இந்த திட்டம், தற்போது கென்யா, உகண்டா, ருவாண்டா, போட்ஸ்வானா மற்றும் நமீபியா ஆகிய நாடு களின் மத்திய வங்கிகளுக் குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நாணயத் தாள்களை மடித்தல், ஒட்டுதல் அல்லது ஸ்டேப்ளர் பின் கொண்டு இணைப்பதன் மூலம் அவை சேதமடைவதாகவும், இது நாட்டின் சட்டப் படி குற்றமாகும் என்றும் வங்கிகள் எச்சரித்துள்ளன.

கென்ய மத்திய வங்கி , இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று அதிரடியாக அறிவித்துள்ளது.

நாணயத் தாள்கள் சேதமடைவதால் அவை ஏ.டி.எம் (ATM) இயந்திரங்கள் மற்றும் பணம் எண்ணும் கருவிகளில் சிக்கல்களை ஏற்படுத் துகின் றன.

இதனால் சேதமடைந்த தாள்களை புழக்கத்திலி ருந்து நீக்கிவிட்டு, புதிய நோட்டுகளை அச்சிட வரி செலுத்துவோரின் பணம் வீணாவதாக வங்கிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தப் பணப் பூங் கொத்து கலாசாரம் வெறும் காதலர் தினத்துடன் நிற் காமல், பிறந்தநாள் மற்றும் இதர விழாக்களுக்கும் பரவியுள்ளதால், ஆண்டு முழுவதும் இதற்கான தேவை அதிகரித்துள்ளது. (3)

---

# ...றக்குமதி ...தீர்மானம்

...ளிலிருந்து சீனாவிற்கு ...ற்றுமதி செய்யப்படும் ...னைத்து தயாரிப்புகளுக் ...ம் இறக்குமதி வரி ...முழுமையாக நீக்கப்படவுள் ...து.

எனினும், சீனாவுடன் ...ராஜதந்திர உறவுகளைக் ...காண்டிராத "எஸ்வா ...டினி" நாட்டுக்கு மட்டும் ...ந்தச் சலுகை பொருந்தாது ...னத் தெரிவிக்கப்பட் ...ள்ளது.

இந்தத் திட்டமானது ...ப்பிரிக்க நாடுகளுக்கும் ...னாவிற்கும் இடையிலான ...ர்த்தகப் பரிமாற்றத்தை ...மலும் வலுப்படுத்தும் என ...திர்பார்க்கப்படுகிறது. (3)

---

## ஷேக் ஹசீனா விவகாரம்
# இந்தியா- பங்களாதேஷ் உறவில் விரிசலை ஏற்படுத்தாது
## தேசியவாத கட்சி நம்பிக்கை



(டாக்கா)

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை இந்தியா முறைப்படி தங்களிடம் ஒப்படைக்கும் என்று பங்களாதேஷில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கும் தேசியவாத கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது. மேலும், இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முட்டுக்கட்டையாக இருக்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வெடித்த கிளர்ச்சியால் பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து, அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டு, முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. இந்த சமயத்தில், 2024 கலவரத்தின் போது நடந்த மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களுக்காக தொடரப்பட்ட வழக்கில், ஷேக் ஹசீனாவுக்கு சிறப்பு தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்தது. இதையடுத்து, அவரை நாடு கடத்த வேண்டும் என்று இந்தியாவிடம் பங்களாதேஷ அரசு கோரிக்கை விடுத்து வந்தது.

தற்போது, பங்களாதேஷில் நடந்த பொதுத் தேர்தலில் தாரிக் ரஹ்மான் தலைமையிலான தேசியவாதக் கட்சி வெற்றி பெற்றது. விரைவில் அங்கு புதிய அரசு பொறுப்பேற்க இருக்கிறது. இந்த நிலையில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை இந்தியா முறைப்படி தங்களிடம் ஒப்படைக்கும் என்று நம்புவதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கும் தேசியவாத கட்சியின் மூத்த தலைவர் மிர்சா பக்ருல் இஸ்லாம் ஆலம்கீர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது இந்த விவகாரம் பங்களாதேஷ் மற்றும் இந்தியா இடையிலான உறவில் ஒரு தடையாக இருக்காது. அவர் அங்கிருப்பதை இந்தியா ஒருபோதும் மறுக்கவில்லை. அதேபோல், ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்ப மாட்டோம் என்றும் இந்தியா கூறவில்லை. சர்வதேச விதிகளின் அடிப்படையில் ஷேக் ஹசீனாவை நாடுகடத்துவது குறித்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலைவாரிதி, இளம் கலைஞர் விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் கலை, இலக்கியத்துறைகளில் சேவையாற்றியவர்களுக்கு வழங்கப்படும் விருதான கலை வாரிதி விருது, இளம் கலைஞர் விருது - 2026 ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் தற்போதுவரை கலை, இலக்கியத் துறைகளில் சேவையாற்றி வருகின்றவர்களில் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் கலைவாரிதி விருதிற்கும் 25 தொடக்கம் 40 வயதிற்கும் இடைப்பட்ட இளம் கலைஞர்கள் இளம் கலைஞர் விருதிற்கும் விண்ணப்பிக்க முடியும்.

இதுவரை இவ்விருதினை பெற்றுக் கொள்ளாத, விண்ணப்பிக்க விரும்பிய தகுதியுடைய கலைஞர்கள் வேலணை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி உரிய ஆவணங்களை இணைத்து எதிர்வரும் 22.04.2026இற்கு முன்னர் வேலணை பிரதேச கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் விருதினை பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய கலைஞர்கள் கலாசார பேரவையின் தெரிவுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டு வேலணை பிரதேச பண்பாட்டுப் பெருவிழா 2026இல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் எனவும் தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த.அகிலன் தெரிவித்துள்ளார். (8)

## குளப் பகுதிகளில்

# சட்டவிரோத ஆக்கிரமிப்புக்களை தடுக்க நடவடிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி குளம் மற்றும் கனகாம்பிகை குளம் ஆகிய குளங்களின் நீரேந்தல் பகுதிகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் குள ஒதுக்கப் பகுதிகள், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள், நில எல்லை நிர்ணயம் மற்றும் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, நீர்ப்பாசன மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கோணங்களில் குளப்பரப்புகளை பாதுகாக்க தேவையான நடைமுறைகள் பற்றியும் கருத்துகள் பரிமாறப்பட்டன.குளப் பகுதிகளில் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. (8-316)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 250 |
| கரட் | 250 | 380 | 400 | 400 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 550 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 500 | 800 | 400 | 800 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 250 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | -- |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 80-140 | 150 | 200 |
| தேசிக்காய் | 150 | 100 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 550 | 500 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 150 | 80 | 200 | 250 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 |

# இன்று ஒரு தகவல் 540



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உழைப்பின் பெருமை!

ஒரு ரயில்வே ஸ்டேஷன். அங்கே ஒருவர் காலாற நடந்து வந்து கொண்டு இருந்தார். அவர் வீட்டிலே நிறைய நேரம் எழுதுவார். எழுதுகிற நேரம் போக மற்ற நேரங்களிலே தம்முடைய சொந்த வயல்களிலே வேலை பார்ப்பார்.

வேலை செய்து முடிந்ததும் பக்கத்தில் இருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவார். அங்கே காலாற கொஞ்ச நேரம் நடந்து வருவார்.

இது அவருடைய தினசரி வழக்கம். இது மாதிரிதான் அன்றைக்கும் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அந்தசமயம் அங்கே பிளாட்பாரத்திலே ஒரு அம்மா நின்று கொண்டிருந்தாங்க.. அந்த அம்மா இவரை கைதட்டிக் கூப்பிட்டாங்க. ஐயா- கொஞ்சம் இப்படி வாங்க என்றார். இவரும் போனார். என்னங்க விடயம் என்று கேட்டார். அந்த அம்மா விவரம் சொன் னாங்க.

ஐயா நானும் என் வீட்டுக்காரரும் இங்கே வந்தோம். அதோ நிற்கிறதே அந்த ரயிலிலே ஏறி ஊருக்குப் போகணும் என்னுடைய வீட்டுக்காரர். அதோ அந்த உணவுவிடுதிக்குப் போயிருக்கார். இன்னும் வரவில்லை.

அதுக்குள்ளே ரயில் புறப்பட்டு விடும் போல இருக்கு. நீங்க ஓடிப் போய் அவரை அழைத்துக் கொண்டு வந்துடுவீங்களா? என்றார்.

இவர் பார்த்தார். சரி என்றார்.

அந்தம்மா தன் கணவருடைய அடையாளங்களையும் சொன்னாங்க... இப்படி இப்படி இருப்பார் - என்று. இவர் அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

நீங்க போய் அழைத்துக் கொண்டு வாங்க. வந்த உடனே உங்களுக்கு உண்டான கூலியையும் கையோட கொடுத்திடுவேன்"- என்றார் அந்தம்மா.

இவர் போனார். அந்தம்மா சொன்ன அடையாளங்களை வைத்து அவங்க வீட்டுக்காரரைக் கையோட அழைத்துக் கொண்டு வந்தார். இந்த அம்மாவிடம் ஒப்படைத்தார்.

உடனே இந்தம்மா ஏற்கனவே சொன்னபடி அவருக்கான கூலிப்பணத்தையும் கொடுத்தாங்க. அவரும் எதுவும் மறுப்பு சொல்லாமலே வாங்கிக்கொண்டார்.

வாங்கிக்கொண்டு திரும்பினார்.. எதிரிலே ஏற்கனவே தெரிந்த நண்பர் ஒருத்தர் வந்துவிட்டார். அவங்க இரண்டு பேரும் பேசிக்கிறதை இந்தம்மா காதிலே வாங்கினாங்க.

அப்பத்தான் அவங்களுக்கு இந்த உண்மை புரிந்தது. அதாவது தன்னிடம் கூலி வாங்கினவர்தான் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் என்று தெரிந்தது.

ரஷ்ய நாட்டின் மிகப் பெரிய ஞானி லியோ டால்ஸ்டாய். சோவியத் நாட்டின் ஈடு இணையற்ற இலக்கிய மேதை .இது தெரிந்தவுடனே இந்தம்மா அவருரிடம் ஓடினாங்க.

"ஐயா..உங்களுக்கா நான் கூலி கொடுத்தேன். நான் பெரிய தவறு பண்ணிவிட்டேன் என்று சொல்லி வருத்தப்பட்டாங்க".

பரவாயில்லை. ஆனால் நீங்க எனக்குக் கொடுத்த கூலிப்பணத்தை நான் திரும்பத் தர மாட்டேன். ஏன் தெரியுமா...? அது நான் உழைச்சுப் பெற்ற தொகை அப்படி என்றார்.

யாருக்குமே அதிக மகிழ்ச்சியைத் தரும் பணம் எது என்றால், அது அவர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த பணம்தான்.

நம்ம ஆளுங்க சில பேருக்கு உழைக்காமல் தீயவழியில் வருகிற பணம்கூட மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

ஒரு பெரிய தொழிற்சாலை. அதன் முதலாளி உள்ளே யாரும் சிகரெட் பிடிக்கக்கூடாது என்று கடுமையான சட்டம் போட்டிருந்தார்.

ஒரு நாள் அந்த முதலாளி தன்னுடைய தொழிற்சாலையை சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்து கொண்டுருந்தார்.

அப்போ ஒரு இளைஞன் உள்ளே சிகரெட் பிடிச்சுக்கிட்டு இருந்தான். அதைப் பார்த்தவுடனே முதலாளிக்குக் கோபம் வந்து விட்டது.

உடனே அவர் தனது உதவியாளரைக் கூப்பிட்டார் "அதோ பார். அவன் சிகரெட் பிடிச்சிக்கிட்டிருக்கான். அவன் கணக்கை முடிச்சு வெளியிலே அனுப்பிவிடு" என்று உத்தரவு போட்டுவிட்டார்.

அதன்படியே.. உடனே அவனை அழைத்துக்கொண்டுப்போய் கணக்குப் பார்த்து சம்பளப்பாக்கி... மற்ற உதவித்தொகை எல்லாத்தையும் மொத்தமாக கையிலே கொடுத்து போயிட்டுவா ன்னு சொல்லி விட்டார்."

அவன் பணத்தோட வெளியிலே வந்தான். வெளியிலே நின்று கொண்டிருந்த ஒருத்தனிடம் சொன்னான்:

"என்னப்பா இது? என்னோட நண்பன் ஒருத்தனைப் பார்க்க இந்த மில்லுக்குள்ளே போனேன். பேர் என்னன்னு கேட்டுட்டு, ஒரு 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொடுத்து போயிட்டு வா - என்று சொல்லி வெளியிலே அனுப்பி விட்டாங்க!" அப்படி என்றான் ஆச்சரியமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கர்ப்பிணிப் பெண்களுக்கான இயற்கையான ஆரோக்கிய உணவுமுறை




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


கருவுற்ற காலத்தில் பெண்கள் மிக ஆரோக்கியமான உணவுவகைகளை உட்கொள்ள வேண்டும். கல்சியம், இரும்புச்சத்து, உயிர்ச்சத்து D, B போன்ற ஊட்டச்சத்து மிகுந்த உணவு வகைகளை உட்கொள்வதன்மூலம் கருவிற்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும்.


சைவ, தாவர உணவுமுறையை பின்பற்றி வரும் பெண்களின் உணவு முறையில் சில சத்துக்கள் இல்லாமல் இருக்கலாம் குறிப்பாக தாவர அடிப் படையிலான உணவுமுறை மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது.

அதில் மாமிசத்தில் கிடைக்கும் சத்துக்கள் இல்லாததால் அதற்கு ஏற்றவாறு மாற்றுத் தெரிவுகளைத் தாவர உணவு வகைகளில் தேட வேண்டும். கரு உருவாகும் போது புரதச்சத்து மிக அவசியம். வளரும் கருவிற்கு ஏதுவாக இருக்கும் வகையில் தாயின் திசுக்கள் வலுவாக இருக்க வேண்டும் என்பதால் புரதச்சத்து மிக முக்கியம்.

தாவர அடிப்படையிலான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் போது பருப்பு, பீன்ஸ் போன்றவற்றை அடிக்கடி சாப்பிட வேண்டும்.

கருவுக்கு போதுமான அளவு இரத்தம் இருக்க வேண்டும். இதனால் இரும்புச் சத்து மிகுந்த உணவு வகைகளை சாப்பிடுவது சிறந்தது.

பொதுவாக இறைச்சி வகைகளில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. ஆனால், சைவ உணவிற்கு மாற்றுத் தெரிவாக முருங்கைக்கீரை மற்றும் கீரை வகைகள் பருப்பு வகைகள் போன்றவற்றை தேர்ந்தெடுக்கலாம். கருவின் மூளை, முதுகெலும்பு, சிவப்பு இரத்த அணுக்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உயிர்ச்சத்து $B_{12}$ அத்தியாவசியமான ஒன்று.



பெரும்பாலான இறைச்சி வகைகளில் விற்றமின் $B_{12}$ உள்ளது. ஆன்ால் தாவர அடிப்படையிலான உணவு வகைகளில் சிறிய அளவில் மட்டுமே விற்றமின் $B_{12}$ உள்ளது.

போதுமான அளவில் விற்றமின் $B_{12}$ இல்லையெனில் கருச்சிதைவு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது.

தாவர அடிப்படையிலான பன்னீர் பாலாடைக்கட்டி, சோயா, பாதாம்பால் போன்றவற்றில் உயிர்ச்சத்து $B_{12}$ உள்ளது. கருவில் என்பு வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான இதய நலனுக்கும் தேவை கல்சியம்.

பெரும்பாலான தாவர வகை உணவுகளான பருப்பு வகைகள், முழுத்தானியங்கள், விதை வகைகள் ஆகியவை உடலில் கல்சியம் சேரும் தன்மையைக் குறைக்கும் இயல்பு கொண்டவை என்பதால் ப்ரோக்கோலி, பாதாம் ஆகியவற்றைச் சாப்பிடலாம். கருவின் மூளை, அணுக்கள் வளர்ச்சிக்கு நாகச்சத்து மிக அவசியம், பூசணி விதை, முந்திரி (பிளம்ஸ்) ஓட்ஸ், சோயா உணவு, வகைகள் ஆகியவற்றை உட் கொள்ளலாம், கருவின் நரம்பு வளர்ச்சிக்கு போலேற்று அவசியம். போலேற்று சத்துக்கள் நிறைந்த உணவுகளை சிட்ராஸ் பழங்கள்(தோடை, நாரத்தை, எலுமிச்சை போன்ற பழங்கள், பருப்பு வகையான துவரம்பருப்பு, கீரைகள், மற்றும் தானியங்கள் ஆகியவை சிறந்த இயற்கை ஆதாரங்களாகும்.

தினசரி உணவில் இவற்றை சேர்ப்பதன் மூலம் உடல் ஆரோக்கியத்தையும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் குறைபாடுகளையும் தவிர்க்கலாம்.

இதைவிட செவ்வாழைப்பழத்திலும், காராமணி, வெள்ளைச் சுண்டல், வெண்டைக்காய் போன்றவற்றிலும் போலேற் சத்துக்கள் காணப்படுகிறது.

பொதுவாக புரதச்சத்து, இரும்புச்சத்து, போலிக்கமிலம், விற்றமின் சத்து என அனைத்துமே கருவுற்ற பெண்ணிற்கு தேவையான சத்துக்களாகும். இவற்றை முழுமையாகப் பெற பசுமையான கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள், முழுத் தானியங்கள் போன்றவற்றை கருவுற்ற காலம் முழுவதும் தடையின்றி எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதல் மூன்று மாதங்கள் மசக்கை வாந்தி அதிகமாகாமல் இருக்க எளிதில் செரிமானமாகும் உணவு சிறந்தது.

வாந்தியால் ஏற்படும் நீர் இழப்பை சமன்செய்யும் விதத்தில் திரவ ஆகாரம், பழச்சாறுகள் போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம், புரதச்சத்துக்காக பருப்பு வகைகளில் உளுத்தம் பருப்பு துவரம் பருப்பு, பாசிப்பருப்பு, சோயா போன்றவற்றை குறிப்பிடலாம்.

புரதமும், கல்சியமும், ஒமேகா-3 கொழுப்பு அமிலமும் சேர்ந்து இணைந்திருக்கும் உழுவை மீன், சிறப்பானதாகும். முளைகட்டிய தானியங்களை பச்சையாகவோ அல்லது ஒவ்வாமை போன்ற பிரச்சினை இருந்தால் சுண்டல் போல் வேக வைத்தும் சாப்பிடலாம். பால் பொருள்களிலும் புரதம் உண்டு.

ஆனால் இவையும் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. பசும்பாலாக இருந்தால் கூடுதல் நன்மை பயக்கும். கருவுற்ற காலம் பெண்களின் வாழ்க்கையில் மற்று மொரு பிறப்புக்காலம் என்று சொல்வதுண்டு.

இயல்பான கருத்தரிப்பு குறைந்து வரும் நிலையில் கருத்தரிப்பு காலங்களில் கூடுதல் கவனமும் உணவு மற்றும் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்கள் தயிர், மோர், யோக்கட் போன்ற புரோபயாடிக்குகள் நிறைந்த உணவுகளையும் எடுக்கலாம். அதிக எண்ணெய் மற்றும் காரம் சேர்ந்த உணவுகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

கர்ப்பிணித் தாய் மாருக்கு இரத்தத்தில் ஹீமோகுளோபின் அதிகரிப்பதற்கு முருங்கைக்கீரை, பேரீச்சம் பழம், சுண்டைக் காய், முளை கட்டிய சுண்டல், திராட்சை, மாதுளை, பீட்ரூட் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். நிலக்கடலையும் சாப்பிடலாம். மலச்சிக்கல் ஏற்படாமல் இருப்பதற்கு நார்ச்சத்தான உணவுகளை தெரிவு செய்து சாப்பிட வேண்டும்.

# இராசிபலன்

16.02.2026
மாசி 04, திங்கட்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.19 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.36 மணிவரை


சுப நேரம் 12.33-2.03 மணிவரை
இராகு காலம் 8.03-9.33 மணிவரை
போதாயன அமாவாசை

சந்திராஷ்டமம்
திருவாதிரை,புநர்பூசம்.


வளவன்




எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.





உறவினர் நண்பர்களிடையே இருந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.





எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வரவைக் காட்டிலும் செலவுகள் கூடும் வாய்ப்புண்டு, அரசு சம்பந்தப்பட்ட வகையில் தாமதங்கள் ஏற்படலாம்.





நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம் பெறலாம், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.





தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.





நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள், தொழில் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.





செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வாகன சுகமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.





சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.





நாவன்மையால் நல்ல பெயர்கிடைக்கும்,எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணப்புழக்கம் கூடும்.




ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் நல்லவிதமாக அமையும், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.




சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.




விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

செய்த வினையை அழிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

பாகம் - 4

979





வந்தியத்தேவன் அதற்கு இணங்க வேண்டாம் என்று இளவரசருக்குச் சமிக்ஞை செய்தான். அதை அவர் கவனிக்கவே இல்லை. "இளவரசிகளின் சித்தம் எங்கள் பாக்கியம்" என்றார் கரிகாலர்.

"மணிமேகலை! உன் மனோரதம் நிறைவேறி விட்டது. சமையல் ஆகி விட்டதா என்று போய்ப் பார்! இல்லாவிடில், சற்று துரிதப்படுத்து" என்று ஏவினாள் நந்தினி.

மணிமேகலை உடனே எழுந்து சமையல் நடந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அதே சமயத்தில் வந்தியத்தேவனும் எழுந்து நின்று கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான்.

அதை நந்தினி கவனித்து விட்டு, "சற்று முன் பிறருடைய மனத்தில் உள்ளதை அறியும் மந்திர சக்தி எனக்கு உண்டு என்று சொன்னேன் அல்லவா!

அதை இப்போது பரீட்சித்துப் பார்க்க விரும்புகிறேன். வல்லத்து இளவரசரின் மனத்தில் இப்போதுள்ள எண்ணத்தைச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

கரிகாலர் சிரித்துக் கொண்டே "சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்றார்.

"அந்தப் புலியைக் கொன்று இந்தப் பெண்களைக் காப்பாற்றியது பெருந்தவறு என்று பச்சாதாபப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

இவர்கள் இருவரும் அந்தப் புலியின் வயிற்றுக்குள் போயிருந்தால் மிக்க நன்றாயிருக்கும் என்று எண்ணமிடுகிறார்!"

கரிகாலர் மேலும் சிரித்துக் கொண்டே, "நண்பா! நீ இப்படி எண்ணமிடுகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! அப்படி நான் எண்ணவில்லை. ஆனால் புலியைப் பற்றியும் இவர்களைப் பற்றியும் எண்ணியது உண்மைதான். இவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட புலி எப்படி உயிரோடு தப்பிப் பிழைத்தது என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"என்ன, தம்பி! உளறுகிறாய்? புலி தப்பிப் பிழைத்ததா? மறுபடியுமா? செத்த புலியின் உடல் தண்ணீரில் மிதந்ததே! அது எங்கே?" என்று இளவரசரும் எழுந்து நின்று கேட்டார். "அதோ பாருங்கள்!" என்று வந்தியத்தேவன் சுட்டிக் காட்டினான்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் மரக்கிளைகளின் இடையில் தண்ணீர்க் கரை தெரிந்தது. அங்கே இளவரசிகள் வந்த படகு கட்டிப் போட்டிருந்தது. அந்தப் படகின் முனையை முன்னங்கால்களினால் பற்றிக் கொண்டு சிறுத்தை படகில் ஏற முயன்று கொண்டிருந்தது.

"ஆகா! இந்தப் புலியின் உயிர் வெகு கெட்டி!" என்றார் கரிகாலர்.

"ஐயா! வாருங்கள், போய் அதைக் கொன்று விட்டு வரலாம். காயம் பட்ட புலியை உயிரோடு விடுவது தவறு!" என்றான் வல்லவரையன்.

"வாணர் குலத்து வீரரே! நீங்கள் இரண்டு வீரர்கள். ஒரு காயம் பட்ட புலிக்காக ஏன் சிரமப்பட வேண்டும்? மணிமேகலையைக் கூப்பிடுகிறேன். அவள் தன் கையில் உள்ள சிறிய கத்தியினால் புலியைக் கொன்று விட்டு வருவாள்!" என்றாள் நந்தினி.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## வதந்திகளை நம்பாதே



பல இடங்களில் தவம் செய்து முடித்த துறவி ஒருவர், சிறிது காலம் தங்குவதற்காகக் கங்கை ஆற்றங் கரையில் குடில் அமைத்தார். அருகிலிருந்த நகரத்திற்கு நாள்தோறும் செல்வார். பிச்சை கேட்பார். கிடைத்ததை உண்டுவிட்டுத் தம் இருப்பிடம் திரும்புவார்.

நாளாக நாளாக அந்நகரத்து மக்கள் துறவிக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தனர். எதைச் செய்தாலும் அவர் அறிவுரை கேட்டே செய்தனர்.

எங்கிருந்தோ வந்த துறவிக்குக் கிடைத்த சிறப்பைக் கண்டு அந்நகரிலிருந்த மூன்று போக்கிரிகள் பொறாமை கொண்டனர். எப்படியும் அவரை அங்கிருந்து விரட்ட முடிவு செய்தனர்.

முதல் போக்கிரி அங்கிருந்த சிலரைப் பார்த்து, "அந்தப் போலித் துறவி நம்மூர்க் குழந்தைகளை எல்லாம் தின்று விடுகிறான். உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

உடனே இரண்டாமவன், "இது உண்மைதான், மக்கள் பேசிக் கொள்வதை நானும் கேட்டேன்" என்றான். மூன்றாமவனும் "ஆமாம் நானும் கேள்விப்பட்டேன்" என்றான்.

இந்தச் செய்தி காட்டுத் தீப் போலப் பரவியது. எல்லோரும் அதை நம்பினார்கள். குழந்தைகளை வீட்டை விட்டு வெளியே அனுப்பினால் துறவி கொன்று தின்று விடுவார் என்று பயந்தார்கள். "துறவி வேறெங்காவது சென்றால்தான் தாங்கள் நிம்மதியாக வாழ முடியும்" என்று பேசிக் கொண்டார்கள். யார் இதைத் துறவியிடம் சென்று சொல்வது என்று சிந்தித்தார்கள், ஆனால் அப்படிச் சொல்ல யாருக்குமே துணிவில்லை.

நடந்தது எதையும் அறியாத துறவி, வழக்கம் போல நகரத்திற்கு வந்தார் அவரைக் கண்டதும் எல்லோரும் பயந்து நடுங்கினார்கள். துணிச்சலை வரவழைத்த ஒருவன், "ஐயா! துறவியாரே! நீர் இங்குள்ள குழந்தைகளைக் கொன்று தின்று வருகிறீர். இனி இங்கு வராதீர், எங்காவது போய் விடும்" என்று சொன்னான்.

மக்கள் கூட்டமும் "ஆமாம், ஆமாம்" என்று கத்தியது. இதைக் கேட்ட துறவி திகைத்தார். அவர்களைப் பார்த்து, "நான் குழந்தைகளைத் தின்கின்றேனா? இந்நகரத்தில் யார் யார் வீட்டில் எத்தனை குழந்தைகள் காணாமல் போய் விட்டன? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அங்கிருந்த எல்லோரும் ஒருவரை ஒருவர் விசாரித்தனர். யார் குழந்தையும் காணாமல் போகவில்லை என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தது.

"ஐயோ! யாரோ சொன்ன பேச்சைக் கேட்டுத் துறவியாரை ஐயப்பட்டு விட்டோமே" என்று வருந்தினார்கள். பிறகு எல்லோரும் துறவியிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும், அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்டிட ஒப்பந்தகாரர்கள் ஆர்ப்பாட்டம் செய்யலாமே!

வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கட்டுமானத்துக்குத் தேவையான மணல் மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக ஒரு டிப்பர் மண் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாயைக் கடந்து விற்பனையாகிறது. உண்மையில் உரிய அனுமதிகள் வழங்கப்பட்டு மண் பெற்றுக் கொள்ளப்படுமாயின், ஒரு டிப்பர் மண் முப்பதாயிரம் ரூபாய் தொடக்கம் 40 ஆயிரம் ரூபாவுக்குள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆனால் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மண்ணை ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக் கொள்வதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

யாழ்.மாவட்டத்தில் கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதற்குரிய இடங்கள் உள்ளபோதிலும் சரியான ஒழுங்குபடுத்தலுடன் – மண் எடுக்கக் கூடிய பிரதேசத்து மக்களுடன் உரியவாறு கலந்துரையாடாததன் காரணமாக, தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தவிர, கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொடுப்பதற்கு வட மாகாண அரச நிர்வாகம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் மௌனமாக இருப்பதுதான் ஆச்சரியமாகவுள்ளது.

அதாவது, மண்ணுக்கு நிலவுகின்ற தட்டுப்பாடு குறித்து வடக்கு மாகாண அரச நிர்வாகம் பேசாதிருப்பதென்பதற்குள் மண்ணுக்கான தேவை குறித்து கவனயீர்ப்புகள் இடம்பெறாத காரணத்தால் அரச நிர்வாகம் மௌனமாக இருக்கிறது என ஊகிப்பதில் தவறில்லை.

உண்மையில் யாழ்.மாவட்டத்தில் மண்ணுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றபோதிலும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டிட ஒப்பந்தக்காரர்கள் அது தொடர்பில் கவனயீர்ப்புக்களை மேற்கொண்டிருக்க வேண்டும்.

இருந்தும் கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் பேசாதிருக்கின்றன எனும் போதுதான், அவர்களுக்கென்ன கட்டுமானத்தை மேற்கொள்கின்றவர்களே கட்டிடத்துக்கான செலவைச் செய்கின்றனர்.

ஆக, மண்ணுக்கு அதிக விலை என்றால் நாங்களும் கட்டுமானத்துக்கான தொகையை அதிகரிக்க வேண்டியதுதான் என்ற மனநிலை இருக்கும்போதுதான், மண்ணுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு – அதனூடு மண்ணுக்கு ஏற்பட்டுள்ள உச்ச விலை குறித்து நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மௌனமடைந்துள்ளன.

எதுவாயினும் நிர்மாணப் பணியில் ஈடுபடுபவர்கள் தங்களின் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாகாது. ஏனெனில் மண்ணுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது, தரம் குறைந்த மண்ணைக் கட்டுமானத்துக்குப் பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இது அவ்வளவு நல்லதல்ல.

எனவே கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தங்கள் அமைப்புகளையும் பொதுமக்களையும் ஒன்றுதிரட்டி கட்டுமானத்துக்குத்தேவையான – தரமான மண்ணை இலகுவாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

# வலி. வடக்கில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

*(யாழ்ப்பாணம்)*

வலி. வடக்கில் படையினர் வசமுள்ள காணிகள் சில, எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

மக்களுடைய காணிகளை மக்களுக்கே பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக குறிப்பாக வடமாகாணத்தில் மக்களுடைய தனியார் காணிகள் பாதுகாப்பு தேவைக்காக படையினரின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

வலி.வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரிடம் உள்ள தனியார் காணிகளை படிப்படியாக உரியவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் வலி. வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை மக்களிடம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவின் அறிவுறுத்தலுக்கு அமைய பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது என அவர் தெரிவித்தார். (க-7)

# மின்கட்டண உயர்வு ●●●●●●● வாக்குறுதியை மீறும் செயல்

## அநுரவைச் சாடும் சஜித்

இலங்கை மின்சார சபையினால், 2026 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மின்சாரக் கட்டணத்தை 13.56 விகிதத்தால் அதிகரிக்க முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானமானது, அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதியை மீறும் செயல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனது எக்ஸ் தளப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மின்சாரக் கட்டணத்தை 33 விகிதத்தால் குறைப்போம் என்று அநுர குமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் வழங்கிய தேர்தல் வாக்குறுதியை மீண்டும் ஒருமுறை மீறுவதாக, இத் தீர்மானம் அமைந்துள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறு பொய்களால் மக்களை ஏமாற்றுவதை அநுர குமார திஸாநாயக்க நிறுத்தி வழங்கிய வாக்குறுதியை எப்போது நிறைவேற்றுவார் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். (க-7)

# பாடசாலைகளில் டெங்குக் குடம்பிகள்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

பாடசாலைகளில் டெங்கு குடம்பிகள் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர, ஆய்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் 40 சதவீத பாடசாலைகளில் டெங்குக்குடம்பிகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் புகைமூட்டம் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். (க-7)

# ஜனாதிபதி வாசஸ்தலமருகே அரங்கேறும் படுகொலைகள்

## நாமல் எம்.பி சாடல்

நாட்டில் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்கி விட்டதாக அரசாங்கம் மார்தட்டிக்கொண்டாலும் ஜனாதிபதி வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே பட்டப்பகலில் படுகொலைகள் அரங்கேறுவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், கடந்த காலங்களில் துப்பாக்கிச் சூடுகளை தடுத்துவிட்டோம் என அமைச்சர்கள் கூறி வந்த நிலையில், தற்போது ஜனாதிபதி வசிக்கும் பகுதியிலேயே தனது மனைவியுடன் சென்ற சட்டத்தரணி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் வீட்டின் முன்னாலேயே ஒரு சட்டத்தரணிக்கு பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் இந்த நாட்டில் சாதாரண குடிமகனின் பாதுகாப்புநிலை என்னவாகும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (க-7)

# அரகலப் போராட்டம்

## வெளிநாட்டு நிதியால் அல்ல மக்களின் பசியால் வெடித்தது

## நாமலுக்கு அரசு பதிலடி

*(கொழும்பு)*

அரகல என்பது வெளிநாட்டு நிதியில் இயங்கியது அல்ல. அது ராஜபக்ஷக்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் மக்கள் பட்டினியால் வாடிய போது வெடித்த தன்னிச்சையான மக்கள் எழுச்சி என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரகல போராட்டம் குறித்து நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

எரிபொருள் வரிசைகளிலும் மின்சாரத் தடைகளிலும் மக்கள் அவதிப்பட்டபோது இந்த "தேசப்பற்று" எங்கே போனது? மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல், அதனை வெளிநாட்டுச் சதி என்று நாமல் ராஜபக்ஷ கூறுவது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அவமதிக்கும் செயலாகும்.

கடந்த காலங்களில் நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்த விசாரணைகளை எமது அரசு தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக, வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படும் திருடப்பட்ட தேசிய சொத்துக்களை மீட்பதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளிலிருந்து தப்பிப்பதற்கும் மக்கள் மத்தியில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குமே நாமல் ராஜபக்ஷ இவ்வாறான ஆதாரமற்ற கருத்துக்களைக் கூறி வருகின்றார்.

கடந்த "அரகல" போராட்டத்தின் போது அமைதியான முறையில் போராடிய இளைஞர்கள் மீது குண்டர் தாக்குதல்களை ஏவிவிட்டது யார் என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெரியும். அன்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இளைஞர்களை ஒடுக்கியவர்கள், இன்று அவர்கள் மீது ஆணைக்குழு அமைப்பதாகக் கூறுவது வேடிக்கையானது.

நாம் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அல்லது அடக்குமுறைக்கும் அஞ்சப்போவதில்லை. ஊழல்வாதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றித் தொடரும் என்றார். (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 23

என்.சொக்கன்

Generation Gap (தலைமுறை இடைவெளி) தெரியும், அதென்ன Bomb Gap? Missile Gap?

'Bomb Gap' என்றால், (அணு) குண்டுகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் நடுவில் உள்ள வித்தியாசம். அதேபோல, ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் ஓர் இடைவெளிக் கணக்குப் போட்டால், அதுதான் "Missile Gap".

உதாரணமாக, அணுகுண்டு ஆராய்ச்சியில் அமெரிக்காவைவிட, சோவியத் யூனியன் இரண்டு ஆண்டுகள் முன்னே இருப்பதாக நம்பப்பட்டது. இதேபோல், இரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள், செயற்கைக் கோள்கள், எலக்ட்ரானிக் ஒற்று அறியும் சாதனங்கள் என்று எல்லா விடயங்களிலும், அவர்களைவிடத் தாங்கள் சில மாதங்களாவது பின்தங்கியிருக்கிறோம் என்று நினைத்தது அமெரிக்கா.

இந்த எண்ணத்திற்கு எண்ணெய் ஊற்றி வளர்த்தது, சாட்சாத் சிஐஏவேதான். திரும்பத் திரும்பச் சொல்வதற்கு போரடிக்கிறது. ஆனாலும், சொல்லித்தான் ஆகவேண்டும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, சோவியத் சமுதாயம், மற்ற யாருடைய பார்வையிலும் படாதபடி ஒரு மறைப்புக்குள் ஒளிந்து கொண்டு விட்டார்கள். அங்கே என்ன நடக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை.


இந்த "யாருக்கும்" என்பதில் சிஐஏவும் அடக்கம். சிஐஏமட்டுமல்ல, வேறு எந்தக் கொம்பாதி கொம்பர்களாலும், அப்போதைய சோவியத் யூனியனுக்குள் அத்தனை சுலபத்தில் ஊடுருவ முடியவில்லை.

இதனால், அமெரிக்காவின் பதற்றம் அதிகரித்தது. சோவியத் யூனியனில் என்ன நடக்கிறது. வளர்ச்சியா, வீழ்ச்சியா, இன்னொரு புரட்சியா, மக்கள் முன்னேறுகிறார்களா அல்லது கீழே விழுந்து கிடக்கிறார்களா, அடிப்படை வசதிகள் எந்த அளவு கிடைக்கின்றன, அறிவியல் முன்னேற்றங்கள் உண்டா.

அவர்களிடம் உள்ள இராணுவம் எத்தனை பெரியது, ஆயுதங்கள் எப்படிப்பட்டவை இப்படி எந்தத் தகவலும் தெரிந்து கொள்ளமுடியாமல் தவித்தார்கள்.

ஆனால், இந்த உப்புமாத் தகவல்களெல்லாம் அமெரிக்காவுக்கு எதுக்கு? எந்த ஒரு நாட்டின் அரசியல், இராணுவ பலமும், அதன் வளர்ச்சியைப் பொறுத்துதான் இருக்கிறது.

சோவியத் யூனியனில் தொழில் வளர்ச்சி எப்படி, மக்களின் சராசரி வருமானம் என்ன, அரசாங்கத்துக்கு வருவாய் எப்படி வருகிறது, அதை எப்படிச் செலவு செய்கிறார்கள், இராணுவத்துக்கு எந்த அளவு பணம் ஒதுக்குகிறார்கள் என்பதெல்லாம் தெரிந்தால்தான், அவற்றின் அடிப்படையில் அமெரிக்கா தனது மாற்று நடவடிக்கைகளை எடுக்க முடியும்.



எல்லாம் ஏட்டிக்குப் போட்டி கணக்குதான்-அணு ஆராய்ச்சிக்காக சோவியத் யூனியன் பத்து ரூபாய் செலவழிக்கிறது என்று தெரிந்தால், உடனடியாக, அதே ஆராய்ச்சிக்கு அமெரிக்கா இருபது ரூபாய் செலவிடத் தயாராக இருந்தது.

ஆனால், "பத்து ரூபாய்" என்கிற அந்த அடிப்படைத் தகவலே தெரியாவிட்டால், அமெரிக்கா என்ன செய்யும்? நம்முடைய அணு ஆராய்ச்சிக்கு இருபது ரூபாய் செலவழித்தால் போதுமா அல்லது இருநூறு/ இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படுமா என்று தெரியாமல் மண்டை உடையுமில்லையா?

பனிப்போர்க் காலகட்டத்தில், அமெரிக்கா அனுபவித்த அத்தனை அவஸ்தைகளுக்கும் அடிப்படை, இந்த ஒரு விடயம்தான் - "சோவியத் யூனியன் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லையே, ஐயகோ, இப்போது நான் என்ன செய்வேன்" என்று எந்நேரமும் பதறிக்கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும், அப்போது சோவியத் யூனியனில் நடந்துகொண்டிருந்த அணு ஆராய்ச்சி, ஏவுகணை வடிவமைப்புத் திட்டங்கள், விண்வெளி ஆய்வுகள் என அனைத்தும், கிட்டத்தட்ட அமெரிக்காவுக்குச் சமமான நிலையில்தான் இருந்தன. இடைவெளி என்று பார்த்தால், அதிகம் இல்லை.

ஆனால், அந்த விடயம் அமெரிக்காவுக்குத் தெரியாதில்லையா? அவர்கள் விதவிதமான கற்பனைகளை வளர்த்துக் கொண்டு அநியாயத்துக்கு பயந்து போனார்கள். அமெரிக்காவைத் தாக்கி அழிப்பதற்காகவே, சோவியத் யூனியன் வித விதமான வண்ணங்களில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தயார் செய்திருக்கிறது.

அவற்றில் நிரப்பி அனுப்புவதற்காகக் கொடும் இரசாயன ஆயுதங்களையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதுதவிர, ஜப்பானில் அமெரிக்கா வீசியதைப் போல நாலு மடங்கு பெரியதாக அணுகுண்டுகள் தயார் செய்து அவற்றில் கம்யூனிஸ்ட் சிவப்பு வர்ணம் பூசிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கர்கள் மத்தியில் இப்படி ஏகப்பட்ட வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன.

பிரச்சினை என்னவென்றால், இவையெல்லாம் வதந்திகள்தான், சோவியத் யூனியனிடம் அப்படிப்பட்ட பயங்கர ஆயுதங்கள் எவையும் இல்லை என்று உறுதியாகச் சொல்வதற்கோ, "அநாவசியமாகக் கண்டதை நினைத்துக்கொண்டு பயப்படாதீர்கள்" என்று நம்பிக்கை தருவதற்கோ, அப்போது அமெரிக்காவில் யாரும் இல்லை.

இதனால் வெங்காயம் வெங்காயமாகக் கூம்புக் கோபுரங்கள் நிறைந்த மாஸ்கோவில் உட்கார்ந்து கொண்டு, சோவியத் அதிகாரிகள் சாண்ட்விச் கடித்தபடி, ஒரு ஸ்விட்ச் தட்டலில் அமெரிக்காவின் முக்கிய இலக்குகளையெல்லாம் அழித்து விடுவார்கள் என்கிற அளவுக்குக் கற்பனைகள் பரவியிருந்தது.

வெறுத்துப்போன அமெரிக்க அரசாங்கம், சிஐஏவின் பட்ஜெட்டை அதிகப்படுத்தியது. என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ தெரியாது, ரஷ்யாவுக்குள் என்ன நடக்கிறது என்பதை எங்களுக்குக் கிரிக்கெட் போட்டிபோல் "லைவ்" ஒளிபரப்பு செய்தாகவேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள்.

சோவியத் எல்லைக்குள், அதன் அரசியல், இராணுவ வட்டாரங்களுக்குள் ஊடுருவுவது கடினமான காரியம்தான். ஆனாலும், சிஐஏ சளைக்காமல் தனது முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

பதிலுக்கு, சோவியத் உளவுத்துறையான கேஜிபியும், இவர்களுக்கு நன்றாகவே தண்ணி காட்டினார்கள். இந்த இரு உளவு அமைப்புகளின் போட்டியில், பனிப்போர் மேலும் தீவிரமடைந்து கொண்டிருந்தது.

அப்போது சிஐஏ அறிந்துகொள்ள விரும்பிய விடயங்கள் இரண்டு- சோவியத் யூனியனிடம் அணுகுண்டுகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் உண்டா, ஆம் எனில், அவை அமெரிக்கா வரை பாயுமா? சுலபமான கேள்விகள்தான்.

ஆனால், அவர்கள் என்னதான் முயன்றும், இதற்குமட்டும் தெளிவான பதில் கிடைக்கவே இல்லை. தட்டுத்தடுமாறி அவர்கள் சேகரித்த விவரங்களும் நிஜமா, பொய்யா என்று நிச்சயமாகத் தெரியாதபடி மசங்கலாக இருந்தன. இந்த விடயத்தில், சோவியத் யூனியன் ஆட்சியாளர்கள் மகா கில்லாடிகளாக இருந்தார்கள். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தரணிகள்...

ஈடுபட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

14 ஆண்டுகளின் பின் சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே நாடளாவிய ரீதியில் இன்று திங்கட்கிழமை அனைத்து வழக்குகளையும்பகிஷ்கரிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. (க-7)

## திருக்கேதீஸ்வர...

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா சிவராத்திரி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான நிலையில், மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதோடு மஹா சிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற விசேட சிவ தேவி பூஜையில் கலந்து கொண்டார். (க-7,285)

## வாடகைக்...

நிறுவனம் ஒன்றில் கார் ஒன்றினை வாடகைக்குப் பெற்ற நபர் ஒருவர் சில நாட்கள் காரினைச் செலுத்திய பின்னர், அதன் தடம் அறி (GPS) கருவியை செயலிழக்கச் செய்துள்ளார்.

இதனை அறிந்த வாகனத்தை வாடகைக்கு கொடுத்தவர் நீர்கொழும்பு பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார். அதன் பிரகாரம் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

அதேநேரம், காரினை வாடகைக்குப் பெற்றவர், யாழ்ப்பாணத்தில் ஒரு நபரிடம் காரினை அடமானமாக வைத்து 80 இலட்ச ரூபாய் பணத்தினைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் அடமானம் வைத்த கார், நீர்கொழும்பில் வாடகைக்கு பெற்ற கார் எனவும் கார் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதனையும் அறிந்த, காரினை அடமானமாக வைத்து பணம் கொடுத்த நபர், காரினை வீதியில் அநாதரவாகத் விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

பொதுமக்களின் தகவலையடுத்து காரினை மீட்ட பொலிஸார் காரினை அடமானம் வைத்துப் பணத்தைப் பெற்ற நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (க-7,33)

## ஜிந்துப்பிட்டி...

பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளிமலைப் பகுதியைச் சேர்ந்த முஜாஹித் முஹம்மது சஹ்ரின் (வயது-20) என இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் கொழும்பில் தொழில் செய்து வருவதாகவும் சம்பவதினத்தன்று சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குச் சென்ற நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் சிகை அலங்கார நிலையத்துக்குள் நுழைந்து அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-7,285)

## பிரிவினைவாதம்...

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தின்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட "கரிநாள்" போராட்டங்கள், நாட்டில் மீண்டும் பிரிவினைவாதக் கோரிக்கைகள் தலைதூக்குவதற்கான அபாயத்தை வெளிப்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி, வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற இப்போராட்டங்களில் வெளிப்படையாகவே சுயநிர்ணய உரிமை கோரும் பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தமை ஒரு தீவிரமான அரசியல் சமிக்ஞையாகும்.

வடக்கு - கிழக்கில் மக்கள் மத்தியில் காணப்படும் இத்தகைய தீவிரமான அரசியல் நிலைப்பாடு, நாடு மீண்டும் ஒரு பிரிவினைவாதப் போக்கினை நோக்கி நகர்வதைக் காண்பிக்கிறது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதே சிறந்த தீர்வாகும்.

ஜனநாயக ரீதியான அதிகாரப் பகிர்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே இத்தகைய தீவிரமான கோரிக்கைகளைத் தணிக்க முடியும் என்றும், இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி பேதமின்றி ஓரணியில் திரள வேண்டும் என்றும் கலாநிதி தயான் ஜயதிலக கோரிக்கை விடுத்துள்ளார். (க-7)

## நிறைவேற்றதி...

கொண்டதாக தற்போதைய அரசாங்கத்தால் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் ஊடகங்கள் மாத்திரமின்றி, மக்களும் தமது எண்ணங்களை வெளிப்படுத்த முடியாத நிலைமை ஏற்படுமென முன்னாள் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஆட்சியாளர்களால் பயங்கரவாதச் சட்டம் ஊடகங்களையும் எதிர்ப்பாளர்களையும் ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போதைய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் ஆட்சியாளர்களுக்கு அதி உச்ச அதிகாரங்கள் கிடைக்கும் வகையில் தற்போதைய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் மக்கள் கருத்தாடல்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

சட்டத்துறையில் நிபுணர்களும் அதில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. யாரோ ஒருவரால் எழுதப்பட்ட சட்டமூலமாகவே அது காணப்படுகிறது. மக்களின் சுதந்திரம் பறிக்கப்படும்போது அதில் முதலாவது இலக்கு ஊடகங்களாகும்.

முதலில் ஊடகங்கள் ஒடுக்கப்பட்ட பின்னரே ஏனையோர் தாக்கப்படுவர். ஊடகங்களை முடக்கினால் ஏனையோரை முடக்குவது இலகுவானதாகும். அதற்கான ஏற்பாடுகள் அந்தச் சட்ட மூலத்தில் காணப்படுகின்றன. இதற்கு மக்கள் எதிர்ப்பினை வெளியிட வேண்டும் என அவர் மேலும் தெரவித்தார். (க-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 6106
J 2 6 8 1 4 7
அத சம்பத
J 8 1 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 0681

சுப தவசக்
திகதி 2026.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 222
மிதுனம் 20 44 58
9419

தன நிதானய
திகதி - 2026.02.15
சீட்டிழுப்பு இலக்கம் - 2136
M 22 66 70 78 M

மெகா பவர்
திகதி 15/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2454
T 08 11 40 47 66

ஜய ஜய
திகதி 2026.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 0374
B 2 1 3 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4348
சீட்டிழுப்பு திகதி 15.02.2026
F 04 05 65 79
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 1415
தனுசு 01 10 51 52 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.02.2026 வெற்றி வாரம் 0814
J 1 1 4 6 1 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,378,503.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3080
சீட்டிழுப்பு திகதி 2026.02.15 தினம் ஞாயிற்றுக்கிழமை
10 30 44 62 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,662,976.00

சனிதா
திகதி 15.02.2026 வெற்றி வாரம் 5241
04 29 78 80 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,777,900.80

சசிரி
வெற்றி வாரம் 910
சீட்டிழுப்பு திகதி 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 14 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,956,960.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4792
சீட்டிழுப்பு திகதி 15.02.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
02 23 53 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,669,007.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 10 12 27 28 31
2256
15.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.629,013,840.00

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2906
சீட்டிழுப்பு திகதி: 2026.02.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,036,064.80
ADA KOTIPATHI
18 40 66 76 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5007)

076 825 7716 (ஆகாஸ்)

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் AIRTECH நிறுவனத்திற்கு பெண் அலுவலக உதவியாளர் தேவை.




- வேலை நேரம் : காலை 8.00 – மாலை 5.30
- ஓரளவு கணனி, ஆங்கில அறிவு
- ஞாயிறு, பௌர்ணமி நாட்களில் விடுமுறை

சம்பளம் - 25,000/= (ஆரம்பம்) (6843)

071 762 2719, 021 221 6092
57, சேர்.பொன்னம்பலம் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு உத்திரட்டாதி நட்சத்திரம் மீன இராசியில் பிறந்த பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு மடத்தடியில் சொந்தமான வெல்டிங் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. (6839)

077 579 5422, 077 337 9686

## பெண் ஊழியர்கள் தேவை

கோழிகள் மற்றும் தோட்டங்களைப் பராமரிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.
திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் 48 000 வரை வழங்கப்படும். (2053)

077 354 9140

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் 2½ பரப்பு 2 குளி காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: (6840)
077 635 0022, 077 474 9512

## மணப்பெண் தேவை

01. உரும்பிராய் - அச்சுவேலி, இந்து, 1991, பூரம், Phd MSc in Software Engineering, Researcher, Norway citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57168
02. அளவெட்டி - வட்டுக்கோட்டை, இந்து, 1992, மகம், MSc in project. Management, Bussiness managing Director, uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54213
03. அளவெட்டி, இந்து, விசாகம், 1993, BSC Engineering (Australia), Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.55831
04. சிறுப்பிட்டி - நீர்வேலி, இந்து, 1994, கேட்டை, BBA. ACCA PGDP in strategic Management, Accountant, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.57140
05. புங்குடுதீவு, இந்து, 1995, பரணி, BSc Biomedical Science, HR in IT, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 49598
06. அராலி - கைதடி, இந்து, 1996, பூசம், BSC (Hons) in Quantity Surveying university of Moratuwa, Quantity surveyor, Dubai மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57521
07. சுண்டுக்குளி – ஏழாலை, Roman Catholic, 1991, மகம், Bachelor in mechanical Engineering (university of Peradeniya) Engineer, consultant, singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57196
08. சுன்னாகம் - அச்சுவேலி, இந்து, 1992, பரணி, Electronic Engineering, Electronic Engineer, Switzerland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 53671.
09. மூளாய் – மானிப்பாய், இந்து, 1988, பரணி, Doctrate in finance Management, Bank Manager & Lecture, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43978
10. கொக்குவில், இந்து, 1989, சதயம், BSc(hons) Quantity Surveying - (university of Moratuwa), Coast Engineer, Qatar மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54656

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
Unmarried, Divorce என்பன உண்டு. (C-5010)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 076 528 4510

## முல்லையில்...

என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கார் ஒன்று முறிகண்டிப் பகுதியில் முன்னே சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-7)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப




10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▶ 2-3 Months

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கொடிகாமம், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், சங்கானை, புத்தூர், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-5008)

V2 TRAVELS 076 822 6244, 076 455 0672

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 08 - 1945 | 15 - 02 - 2026 |



## குமாரசாமி சண்முகநாதன்

### (ஓய்வுநிலை மேல்நீதிமன்றப் பதிவாளர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சண்முகநாதன் அவர்கள் நேற்று (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மலோஜனி அவர்களின் அன்புக் கணவரும் தங்கரத்தினம்(கொழும்பு), பாலசுந்தரம்(கனடா), காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சிவஇன்பநாயகி மற்றும் சிவசுப்பிர மணியம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும் தர்ஷிகா(தொழிற்துறைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), கௌஷிகன் (மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு), துளசிகன்(மாவட்ட / நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை), நிரோஷிகன் (பேரவைச் செயலகம் - வடமாகாணசபை, கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), நிரூஜா (தொழில்நியாய மன்று - யாழ்ப்பாணம்), சியாமளா(தொழிற்துறைத் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷயன், ஷயானி, பிரஹீத், பிரணிகா, யாதிரன், விகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2026) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

95, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (6848)

தகவல் : குடும்பத்தினர்
021 222 6042

## 22 விற்பனைக்கு 22

- யாழ்.கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
- யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்
- யாழ்.லைடன் கம்பனிக்கு அண்மையில் காரைநகர் வீதியில் 40 பரப்புக் காணியும்
- யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்
- யாழ்.பிறவுண் வீதியில் ஒரு பரப்பு, 1½ பரப்பு, 2 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 6 பரப்புக் காணியும்
- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 12 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 32 அடி அகலமும் 116 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
- யாழ்.ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 2 கடைகளும்
- யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
- யாழ்.அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையில் 75 பரப்புக் காணியும்
- யாழ். A9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 16 பரப்பு, 14 பரப்பு காணியும்
- யாழ்.மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்துக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதி CTB பஸ் தரிப்பிடத்திற்கு பின்பாக 2 கடைகளும் உடன் விற்பனைக்குண்டு.

(C-5004)

தொடர்புகளுக்கு: 077 723 2535

கனகசபை தர்மகுலசிங்கம்
இல.378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org